
**அதிக மகசூல் தரும் இயற்கை விதை நேர்த்தி**

First Published : 08 Apr 2010 12:00:00 AM IST



இயற்கை விதை நேர்த்தி முறையில் விதைகளை ஆட்டூட்டக் கரைசலுடன் ஊற வைத்து பதப்படுத்தும் விவசாயி.

சிதம்பரம், ஏப். 7: பயிர்களின் முளைப்புத்திறன் மற்றும் நோய் தாக்குதலில் இருந்து பாதுகாக்கவும், அதிகளவு மகசூல் பெறவும் விதை நேர்த்தி முறையை வேளாண்துறை மற்றும் ஆராய்ச்சி நிலையங்களின் பரிந்துரையின்படி தமிழக விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக வேதியியல் மற்றும் செயற்கை வேளாண் பூஞ்ஞாணக் கொல்லிகள், பூச்சிக்கொல்லிகள் கொண்டு விதை நேர்த்தி செய்யும் போது பயிர்கள் பூச்சி மற்றும் நோய் தாக்குதலில் இருந்து பாதுகாக்கப்பட்டாலும் நமது உணவும், நிலமும் விஷத்தன்மை மற்றும் மாசு அடைவது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. இத்தகைய சூழலில் விவசாயிகள் சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், அதிக லாபம் மற்றும் மகசூல் பெறவும் இயற்கை விதை நேர்த்தி செய்வது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

இயற்கை விதை நேர்த்தி முறை: விவசாயிகள் தங்களின் விதைகளை இயற்கை முறையில் தயார் செய்யப்படும் ஆட்டூட்டக்கரைசல் (ஆட்டுப்புழுக்கை, ஆட்டு சிறுநீர், ஆட்டுப்பால், ஆட்டுத்தயிர், வாழைப்பழம், இளநீர், கடலைப் பிண்ணாக்கு, கரும்புச்சாறு மற்றும் கள் ஆகியவற்றை கொண்டு தயார் செய்யப்படும் கலவை) அல்லது பஞ்சகவ்யா கலவையை (சாணம், மாட்டு சிறுநீர், பால், தயிர், நாட்டுச்சர்க்கரை, வாழைப்பழம், கரும்புச்சாறு, கள், ஈஸ்ட் மற்றும் கடலைப் பிண்ணாக்கு) 300 மில்லி கிராம் என்ற அளவில் 10 லிட்டர் நீரில் கலந்து விதை நேர்த்திக்கு பயன்படுத்தலாம். நெல் மற்றும் கடினமான தோலுடைய விதைகளை 24 மணி நேரம் ஊற வைத்து விதைக்கலாம்.

இவ்வாறு விதை நேர்த்தி செய்தபின் விதைகளை நிழலில் நன்றாக உலர்த்திய பின்பே விதைக்க வேண்டும். இவ்வாறு இயற்கை முறையில் விதை நேர்த்தி செய்வதால் நாற்றுகள் நன்றாக வாளிப்பாக வளரும். அதிக எண்ணிக்கையில் வேர்

பிடிப்பு காணப்படும். பயிர்கள் நன்றாக வறட்சியைத் தாங்கி வளரும் தன்மை பெறும், பூச்சிகள், நோய் தாக்குதல்கள் இருக்காது.

அடுத்த பருவத்திற்கு தேவையான விதைகளை பஞ்சகவ்யா அல்லது ஆட்டூட்டக் கரைசலில் நனைத்து நிழலில் காய வைத்து விவசாயிகள் எளிதாக சேமிக்கலாம். இதன் வாயிலாக விதைகளை பூச்சிகளும், நோயும் தாக்காது. முளைப்புத் திறனும் அடுத்த பருவத்திலும் குறையாமல் பாதுகாக்கப்படும்.

பிற பயன்கள்: நெல், தக்காளி நாற்றுகளை, வாழைக் கன்றுகளை பஞ்சகவ்யா மற்றும் ஆட்டூட்டக் கரைசலில் நனைத்து நடவு செய்யும் போது பூஞ்சானம், வைரஸ் மற்றும் வேர் புழுக்களின் தாக்குதல் கட்டுப்படுத்தப்படும். குறைந்த செலவில் விவசாயிகள் தங்களிடம் உள்ள இயற்கை வேளாண் பொருள்களை கொண்டு செய்வதால் சுற்றுச்சூழல் மாசுபடுவது தடுக்கப்படும்.

மேலும் விவசாயிகள் அதிக மகசூல் மற்றும் லாபம் பெற முடியும். எனவே தமிழக விவசாயிகள் இயற்கை விதை நேர்த்தி வாயிலாக அதிக லாபம் பெறலாம் என அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத்துறை விரிவுரையாளர் தி.ராஜ்பிரவின் தெரிவித்துள்ளார்.

**ஒவ்வொரு முறையும் மண் பரிசோதனை!**

First Published : 08 Apr 2010 12:00:00 AM IST


வேலூர், ஏப். 7: விவசாய விளை நிலங்களில் தொடர்ந்து பயிர் செய்யும் போது மண்ணில் உள்ள ஊட்டச்சத்துகளின் அளவு குறையும். இதனால், மகசூல் பாதிக்கப்படும். இதைத் தவிர்க்கவும், மண்ணின் வளத்தை பாதுகாக்கவும் ஒவ்வொரு முறை பயிர் செய்யும் போதும் மண் பரிசோதனை செய்து ஊட்டச்சத்து மற்றும் உரங்களை இட்டால் இட்டால் அதிக மகசூல் பெறலாம்.

பயிர்கள் உள்ள நிலத்தில் மண் மாதிரி எடுக்கக் கூடாது. நிலம் தரிசாக இருக்கும் போது மட்டுமே மண் மாதிரிகள் எடுக்க வேண்டும். வரப்பு வாய்க்கால்கள், மரத்தடி நிழல் பகுதிகள், கிணற்றுக்கு அருகில், குப்பை உரங்கள், பூஞ்சணம் மற்றும் பூச்சி மருந்து இடப்பட்ட பகுதிகளில் இருந்து மண் மாதிரிகள் எடுக்கக் கூடாது. மண் மாதிரிகள் எடுக்க வேண்டிய இடத்தில் உள்ள இலை, சருகு, புல், செடி ஆகியவற்றை கையினால் மேல் மண்ணை நீக்காமல் அப்புறப்படுத்த வேண்டும். மாதிரி எடுக்கும் போது ஆங்கில எழுத்து "வி' போல் இருபுறமும் வெட்டி மண்ணை நீக்கிவிட வேண்டும். பிறகு நிலத்தின் மேல்மட்ட பகுதியில் இருந்து கொழு ஆழம் வரை (0-15 செ.மீ அல்லது 0-23 செ.மீ) ஒரு அங்குலம் அல்லது 2.5 செ.மீ பருமனில் மண் மாதிரி சேகரிக்க வேண்டும்.

மண் மாதிரிகள் ஈரமாக இருந்தால் முதலில் அதை நிழலில் உலர்த்த வேண்டும். நுண் ஊட்டங்கள் அறிய வேண்டுமெனில் எவர்சில்வர் அல்லது பிளாஸ்டிக் குப்பி மூலம் மண் மாதிரிகள் எடுத்து பிளாஸ்டிக் பைகளில் சேகரிக்க வேண்டும். மண்வெட்டி, இரும்பு சட்டிகளை பயன்படுத்தக் கூடாது. சேகரித்த மாதிரிகளை ஒரு பிளாஸ்டிக் வாளியில் போட்டு நன்றாக கலக்கி அதிலிருந்து ஆய்வுக்காக அரை கிலோ மண் மாதிரியை கால்குறைப்பு முறையில் எடுக்க வேண்டும். அதாவது, வாளியில் சேகரித்த மண் மாதிரியை சுத்தமான சாக்கு அல்லது பாலிதீன் தாள் மீது பரப்பி நான்றாக பிரித்து எதிர் முனைகளில் காணப்பட்ட இரண்டு பகுதிகளை கழித்து விட வேண்டும். தேவைப்படும் அரைக் கிலோ அளவு வரை இம் முறையைக் கையாள வேண்டும். சேகரித்த மண் மாதிரியை சுத்தமான ஒரு துணிப்பை அல்லது பாலிதீன் பையில் போட வேண்டும். அதன் மீது மாதிரி பற்றிய விவரங்களை குறிப்பிட வேண்டும். உரம் மற்றும் பூச்சி மருந்துகள் வைக்கப்பட்டிருந்த சாக்குகள், பைகளை பயன்படுத்தக் கூடாது. இவ்வாறு மண் மாதிரி எடுத்து பரிசோதனை செய்து ஊட்டச்சத்து, உரங்களை பரிந்துரைப்படி இட்டால் அதிக மகசூல் பெறலாம் என்று வேலூர் வேளாண்மை உதவி இயக்குநர் கே.தமிழ்செல்வன் தெரிவித்துள்ளார்.

வறட்சிப் பகுதிக்கும் வாழ்வளிக்கும் சொட்டு நீர்ப் பாசனம்

First Published : 08 Apr 2010 12:00:00 AM IST



சொட்டு நீர் பாசனம் மூலம் வளர்க்கப்படும் கத்தரிச் செடிகள். (உள்படம் ) சொட்டு நீர்ப் பாசன இயந்திரம்.

புதுச்சேரி, ஏப். 7: தண்ணீர் குறைவான பகுதியிலும் அதிக நிலப்பரப்பில் சாகுபடி செய்ய உகந்ததாக சொட்டு நீர்ப் பாசன முறை திகழ்கிறது. இப்போது இப் பாசன முறை துல்லிய வேளாண் திட்டம் என்ற அடிப்படையில் விவசாயிகளிடம் பிரபலமாகி வருகிறது. இதற்காக புதுச்சேரி அரசு பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது.

இத் திட்டத்தின் கீழ் ஒரு ஹெக்டேருக்கு ( 1 ஹெக்டேர் என்பது இரண்டரை ஏக்கர்) ரூ.1.5 லட்சம் வரை அரசு மானியமாக வழங்கப்படுகிறது. சொட்டு நீர்ப் பாசனம் செய்வதற்கான இயந்திரம் வாங்க ரூ.1 லட்சமும், நீரில் கரையக்கூடிய உரங்களுக்காக ரூ.50 ஆயிரமும் மானியமாக வழங்கப்படுகிறது. இந்த ரூ.1.5 லட்சமும் விவசாயிகளுக்கு 100 சத மானியத்தில் முழுவதும் இலவசமாகக் கிடைக்கிறது.

இதன் காரணமாக புதுச்சேரியில் விவசாயிகளிடம் பிரபலமாகி வரும் இத் திட்டத்தின் கீழ் இதுவரை 200 ஹெக்டேர் நிலப்பரப்பு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், இன்னும் 5 ஆண்டுகளில் 1000 ஹெக்டேர் நிலப்பரப்பை கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சொட்டு நீர்ப் பாசனத்தின் மூலம் கரும்பு, வாழை, காய்கறி பயிர்களான கத்திரி, அவரை, வெண்டை போன்றவை பயிரிடப்படுகின்றன. சொட்டு நீர்ப் பாசனம் செடிக்கு நேரடியாக வேர் பகுதிகளில் நீர், மற்றும் நீரில் கரையக்கூடிய உரங்கள் கிடைக்கச் செய்கிறது. இதன் மூலம் ஓர் ஏக்கர் நிலப்பரப்புக்குத் தேவையான நீரை 5 ஏக்கருக்குப் பயன்படுத்த முடியும். வயலில் செடிகள் எண்ணிக்கை அதிக அளவில் நடப்படுகிறது. இதனால் விளைச்சல் அதிகம். சாதாரண நிலத்தில் கிடைக்கும் விளைச்சலைக் காட்டிலும் 40 சதவீதம் விளைச்சல் அதிகம். நீர் வீணாகாமல் பாதுகாக்கப்படுவதால் களை வருவதும் தவிர்க்கப்படுகிறது. இதனால் களை எடுக்க தொழிலாளர்களுக்கான கூலி மிச்சம். செடியின் வேருக்கு நேரடியாக நீரும், நீரில் கரையும் உரங்களும் போய்ச் சேருவதால் மார்க்கெட்டுக்குத் தேவையான கத்தரி உள்ளிட்ட வீரிய ரக காய்கறிகளைப் பயிரிடலாம். காய்கறி சாகுபடி உள்ளிட்ட பயிர்களுக்கு துல்லிய வேளாண் திட்டத்துக்காக இன்னும் 2 ஆண்டுகளுக்கு இலவசமாக இடுபொருள்கள் வழங்கப்படும் என்று முதல்வர் வைத்திலிங்கம் பட்ஜெட் உரையில் அறிவித்துள்ளார். இதனால் புதுச்சேரியில் காய்கறி சாகுபடி உள்ளிட்டவை அதிக அளவில் விளைச்சல் இருக்கும். இத் திட்டத்தின் கீழ் பயன் பெற புதுச்சேரியில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தை அணுகி விண்ணப்பம் பெற்று, அதை நிரப்பிக் கொடுக்க வேண்டும்.

இதைத் தொடர்ந்து,வேளாண் அலுவலர்கள் ஆய்வுக்குப் பிறகு அவர்களின் பரிந்துரை அடிப்படையில் இத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் தேர்வு செய்யப்படுவர். இத் திட்டத்துக்காக புதுவை மாநிலத்தில் ஆண்டுதோறும் ரூ.1.16 கோடி

ஒதுக்கீடு செய்யப்படுகிறது.  இத் திட்டத்தின் கீழ் தண்ணீர் சேமிக்கப்படுவதுடன் மின்சார செலவும் மிச்சமாகிறது. மின் தடை அடிக்கடி ஏற்படும் நிலையில் இத் திட்டம் இப்போது அவசியத் தேவையாக உள்ளது.

**கூடுதல் விலைக்கு உரங்களை விற்றால் கடும் நடவடிக்கை**

First Published : 08 Apr 2010 06:30:10 AM IST

திண்டுக்கல், ஏப். 7: திண்டுக்கல் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு உரங்கள் விற்பனை செய்யும் போது உர மூட்டையில் குறிப்பிட்டுள்ள சில்லரை விற்பனை விலைக்கு மேல் விற்கக் கூடாது. கூடுதல் விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் மா.வள்ளலார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.   உரக் கடைகளில்  மூட்டையில் உள்ள சில்லரை விற்பனை விலைக்கு மேல் விற்பனை செய்தால் உரக் கட்டுப்பாட்டு ஆணையின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

காலாவதியான பூச்சி மருந்துகளை விற்பனை செய்யக் கூடாது.   இது தொடர்பாக புகார் தெரிவிக்க விரும்புவோர் மாவட்ட ஆட்சியர் உதவியாளர் கைபேசி எண் 94433 94826 மூலம் தகவல் தெரிவிக்கலாம் என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 74.21 அடி**

First Published : 08 Apr 2010 12:53:55 AM IST

ஈரோடு, ஏப்.7: பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை 74.21 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு ஆயிரத்து 610 கன அடி வீதம் தண்ணீர் வந்தது.

பாசன வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. ஆற்றில் விநாடிக்கு 300 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணை நீர் இருப்பு 12 டிஎம்சி.

**மாணவர்களுக்கு பயிர் பாதுகாப்பு பயிற்சி**

First Published : 08 Apr 2010 04:45:32 AM IST

கரூர், ஏப். 7:  கரூர் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை உதவி இயக்குநர் மூலம் 2009-10-ம் ஆண்டிற்கான பள்ளி மாணவ, மாணவிகளுக்கான பயிர் பாதுகாப்பு பயிற்சி முகாம் கிருஷ்ணராயபுரம் அருகேயுள்ள சேங்கல் அரசு உயர்நிலைப் பள்ளியில் அண்மையில் நடைபெற்றது.

முகாமிற்கு வேளாண்மை உதவி இயக்குநர் ந. கந்தசாமி தலைமை வகித்தார். பயிர்களுக்கு ஒருங்கிணைந்த பாதுகாப்பு குறித்து ஒளி, ஒலி காட்சி மூலமாக வேளாண்மை அலுவலர் வெங்கட்ராமன் விளக்கம் அளித்தார்.

பயிர்களில் நன்மை செய்யும் பூச்சிகள், தீமை செய்யும் பூச்சிகள், தீமை செய்யும் பூச்சிகளை அழிக்கும் நன்மை செய்யும் பூச்சிகள் குறித்து படக் காட்சிகள் மூலமாக செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும், பயிர்களுக்கு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பின் அவசியம் குறித்து விளக்கப்பட்டது. பள்ளி மாணவர்கள் பயிர் பாதுகாப்பு குறித்து தெரிந்துகொள்ள வேண்டியதன் அவசியம் குறித்த பயிற்சி கையேடு வழங்கப்பட்டது.  பள்ளி தலைமை ஆசிரியர் சக்திவேல் வரவேற்றார். ஆசிரியர் சண்முகப்பிரியா நன்றி கூறினார்.

**மேட்டூர் நீர்மட்டம் 71.62 அடி**

First Published : 08 Apr 2010 01:10:14 AM IST

சேலம், ஏப். 7: மேட்டூர் அணை நீர்மட்டம் புதன்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 71.62 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,783 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 1,900 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணை நீர் இருப்பு 34.10 டி.எம்.சி.

**பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி ஆர்ப்பாட்டம்**

First Published : 08 Apr 2010 02:53:20 AM IST

வேலூர், ஏப். 7: வேலூரில், பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் வேலூரில் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பால் கொள்முதல் விலையில் பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.5-ம், எருமை பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.8-ம் உயர்த்தி வழங்க வேண்டும். பால் பட்டுவாடா தொகையை நிலுவை இல்லாமல் வழங்க வேண்டும். சென்னை, மதுரை, ஆம்பூரில் மூடப்பட்ட தீவன ஆலைகளைத் திறந்து உறுப்பினர்களுக்கு 50 சதவீதம் மானியத்தில் தரமான தீவனம் வழங்க வேண்டும்.

கறவை பசு வாங்க 30 சதவீதம் மானியத்துடன் ரூ.30,000 வீதம் பால் கூட்டுறவு சங்கத்தின் மூலம் கடன் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு  மாவட்டச் செயலாளர் எம்.சிவாஜி, மாவட்டத் தலைவர் வி.சிவசக்ரவர்த்தி தலைமை வகித்தனர். மாநிலத் தலைவர் கே.முகமது அலி தொடங்கி வைத்துப் பேசினார். மார்க்சிஸ்ட் கம்யூ., கட்சி மாவட்டச் செயலர் ஏ.நாராயணன். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலச் செயலாளர் எஸ்.தயாநிதி, சிஐடியூ மாவட்டப் பொருளாளர் என்.பரசுராமன் உள்பட பலர் பங்கேற்றனர்.

**பால் விலை லிட்டருக்கு ரூ.3 உயர்ந்தது**

First Published : 08 Apr 2010 12:00:00 AM IST

பெங்களூர், ஏப். 7: கர்நாடகத்தில் பால் விலை லிட்டருக்கு ரூ.3 உயர்ந்தது.

பெங்களூர் மாநகராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்பே பால் விலையை உயர்த்த அரசு திட்டமிட்டிருந்தது. ஆனால் தேர்தல் குறுக்கிட்டதால் பால் விலை உயர்வுநிறுத்திவைக்கப்பட்டது. இப்போது தேர்தல் முடிவடைந்தது. இந்நிலையில் பால் விலையை உயர்த்தி பால் கூட்டுறவு சம்மேளனத் தலைவரும், சட்டப்பேரவை உறுப்பினருமானசோமசேகர ரெட்டி தெரிவித்தார்.

அவர் பெங்களூரில் புதன்கிழமை அளித்த பேட்டி: பால் உற்பத்திக்கு ஆகும் செலவு அதிகரித்துள்ளதால் பால் விலை உயர்வு தவிர்க்க முடியாதது ஆகிவிட்டது. இதனால் பால் விலை லிட்டருக்கு ரூ.3 உயர்த்தப்படுகிறது. இந்த உயர்வு வியாழக்கிழமை முதல் அமலுக்கு வருகிறது. தற்போது பால் கூட்டுறவு சம்மேளனத்தின் சார்பில் "நந்தினி' என்ற பெயரில் விற்பனை செய்யப்படும் ஒரு லிட்டர் பால் ரூ.16க்கு விற்பனை செய்யப்படுகிறது. வியாழக்கிழமை முதல் ஒரு லிட்டர் பால் ரூ.19க்கு விற்பனை செய்யப்படும்.

அதிகரிக்கப்படும் ரூ.3ல் உற்பத்தியாளர்களுக்கு எவ்வளவு வழங்க வேண்டும் என்பதை மாவட்டங்களில் உள்ள பால் கூட்டுறவு சங்கங்கள் தீர்மானித்து வழங்கும். அதிகபட்சம் லிட்டருக்கு ரூ.2.50 வரை கிடைக்கும். கர்நாடகத்தில் பால்

விலையை லிட்டருக்கு ரூ.3 உயர்த்தினாலும் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும் போது இன்னும் கர்நாடகத்திலேயே பால் விலை குறைவாக உள்ளது.

குஜராத் மாநிலத்தில் ஒரு லிட்டர் பால் ரூ.26, மகாராஷ்டிரத்தில் ரூ.25, ஆந்திரத்தில் ரூ.24, புதுதில்லியில் ரூ.23, கேரளத்தில் ரூ. 20, தமிழகத்தில் ரூ.20.50 என ஒரு லிட்டல் பால் விற்பனை செய்யப்படுகிறது. பால் உற்பத்திச் செலவு அதிகரிப்பால் உற்பத்தியாளர்கள் பெரும் நஷ்டத்தை சந்தித்து வருகிறார்கள். இதைசரி செய்ய லிட்டருக்கு ரூ.4 உயர்த்த திட்டமிடப்பட்டது. ஆனால் இப்போது ரூ.3 தான் உயர்த்தப்பட்டுள்ளது.

பால் உற்பத்தியாளர்களுக்கு அரசு லிட்டருக்கு ரூ.2 ஊக்கத் தொகை அளிக்கிறது.

அவ்வாறு இருந்தும் ஒரு லிட்டர் பால் உற்பத்திக்கு ரூ.15.69 செலவாகிறது.

ஆனால் அவர்களுக்கு தற்போது லிட்டருக்கு ரூ.13 மட்டுமே வழங்கப்படுகிறது.

இதனால் ஒரு லிட்டர் பாலுக்கு உற்பத்தியாளர்களுக்கு ரூ.2.69 நஷ்டம் ஏற்படுகிறது. இதை தடுக்கும் நோகத்தில் இப்போது லிட்டருக்கு ரூ.3 உயர்த்தப்பட்டுள்ளது.

தற்போது கூட்டுறவுச் சங்கத்துக்கு தினமும் 30 லட்சத்து 60 ஆயிரம் லிட்டர்பால் வருகிறது. இப்போது பால் விலை உயர்த்தப்பட்டதன் மூலம் தினமும் கூடுதலாக2 லட்சம் லிட்டர் முதல் 3 லட்சம் லிட்டர் வரை கூடுதலாக பால் கூட்டுறவுச் சங்கத்துக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பால் விலை கடைசியாக 2007-ம் ஆண்டு உயர்த்தப்பட்டது. அதன்பிறகு இப்போதுதான் உயர்த்தப்படுகிறது.

குறைந்த வட்டியில் கடன்: விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் கடன் அளிப்பது

போல தங்களுக்கும் குறைந்த வட்டியில் கடன் அளிக்க வேண்டும் என பால் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்தக் கோரிக்கையை முதல்வர் எடியூரப்பா ஏற்றுக் கொண்டுள்ளார். பால் உற்பத்தியாளர்கள் பசுக்கள் வாங்க தற்போது 12.5 சதவிகிதத்தில் கடன் அளிக்கப்படுகிறது. இனி 6 சதவிகித வட்டியில் கடன் அளிக்கப்படும் என்றார் அவர்.

தினமலர்

**சூரிய சக்தியை பயன்படுத்தி மின் உற்பத்தி : விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்**

பொள்ளாச்சி : 'மின்தட்டுப்பாட்டை போக்க சூரியசக்தியை பயன்படுத்தி மின் உற்பத்தி செய்ய விவசாயிகளை அரசு ஊக்குவிக்க வேண்டும்' என்று, தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை வைத்துள்ளது.

தமிழக விவசாயிகள் சங்க பொள்ளாச்சி தாலுகா கூட்டம் தலைவர் சுப்பிரமணியம் தலைமையில் நடந்தது.

துணைத்தலைவர் கோபால் ரத்தினம் முன்னிலை வகித்தார்.அடிக்கடி மின்வெட்டு ஏற்பட்டு, மின்வினியோகம் சீராக இல்லாததால் பாசன பயிர்கள் பாதிப்புக் குள்ளாகியுள்ளன. ஆழ்குழாய் கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுத்து பயன்படுத்துவதிலும் மின்தடையால் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அதனால், சூரியஒளியில் இருந்து 20 எச்.பி., திறன் மின்சாரம் எடுக்க தேவையான உபகரணங்களை விவசாயிகளுக்கு மானியமாக வழங்க வேண்டும். மின்தட்டுப்பாட்டை போக்க வேண்டுமானால் விவசாயிகளே சூரியசக்தியை பயன்படுத்தி மின் உற்பத்தி செய்ய அரசு ஊக்குவிக்க வேண்டும்.கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்குவதை போன்று, அரசுடமையாக்கப் பட்ட வங்கிகளிலும் விவசாயிகளுக்கு கிரடிட் கார்டு மூலம் சொத்து மதிப்பின் அடிப்படையில் வட்டியில்லா கடன் வழங்க வேண்டும்.

பாசன பகுதிகளில் பி.ஏ.பி., திட்டத்தின் மூலம் தொட்டிகள் அமைத்து, ஆண்டு முழுவதும் சொட்டு நீர் பாசனம் மூலம் தண்ணீர் வழங்க வேண்டும். பழுதடைந்த சொட்டு நீர் உபகரணங்களை மாற்றிக்கொள்ள மானியம் வழங்க

வேண்டும்.இவ்வாறு பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. துணை செயலாளர் சவுந்தர்ராஜ், பொருளாளர் ராமசாமி, அமைப் பாளர் கந்தவடிவேல் ஆகியோர் பேசினர். தாலுகா செயலாளர் முத்துசாமி நன்றி கூறினார்.

**வால்பாறையில் அதிகாலை பனிப்பொழிவு : தேயிலை செடி கருகுவதால் உற்பத்தி பாதிப்பு**

வால்பாறை : வால்பாறை அருகே பனியால் தேயிலை செடிகள் கருகியதால், உற்பத்தி பாதிக்கப் பட்டுள்ளது. வால்பாறையில் உள்ள 50 க்கும் மேற்பட்ட தேயிலை எஸ்டேட்டுகளில் 80 சதவீதம் தேயிலை மட்டுமே பயிரிடப்பட்டுள்ளது. மீதமுள்ள இடத்தில் காபி, ஏலம், மிளகு போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. வால்பாறையில் உள்ள தேயிலை எஸ்டேட் டுகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் தேயிலையை நம்பி தான் வாழ்ந்துவருகின்றனர். இந்நிலையில் வால்பாறை கடந்த ஆண்டு தென் மேற்குப்பருவ மழை எதிர் பார்த்த அளவு பெய்தாலும், வட கிழக்குப்பருவ மழை விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை கொடுத்தது.
இதனால் வால்பாறையில் இந்த ஆண்டின் துவக்கத்திலிருந்தே கடும் வறட்சி நிலவியதால் எஸ்டேட்டின் பல பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தேயிலை செடிகளுக்கு போதிய தண்ணீர் இல்லாமல் கருகி தேயிலை உற்பத்தி பாதிக்கப் பட்டது.இதனால் தற்காலிக தொழிலாளர்கள் வேலை இல்லாமல் அவதிப்படுகின்றனர்.
குறிப்பாக கவர்க்கல் எஸ்டேட் பகுதியில் அதிகாலையில் நிலவும் கடும் பனிப்பொழிவால் இங்குள்ள தேயிலை எஸ்டேட்டில் செடிகள் கருகியுள்ளன. இதே போல் பெரும்பாலான எஸ்டேட்டுகளில் அதிகாலையில் நிலவும் கடும் பனிப்பொழிவால் தேயிலை செடிகள் கருகி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

**ஏப்.,14ம் தேதிக்குள் கொப்பரை கொள்முதல் துவக்க 'டான்பேட்' அதிகாரிகள் உறுதி**

பொள்ளாச்சி : அரசு கொப்பரை கொள்முதலை உடனடியாக துவங்காததால், விவசாயிகள் கொப்பரையை இருப்பு வைக்க துவங்கியுள்ளனர். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று ஏப்., 14ம் தேதிக்குள் கொப்பரை கொள்முதல் துவங்கப்படும் என்று 'டான்பேட்' அதிகாரிகள் தெரிவித்தனர்.
தேங்காய் விலை சரிவை தடுக்கவும், தென்னை விவசாயிகளை ஊக்குவிக்கவும் மத்திய அரசு கொப்பரைக்கு ஆதரவு விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்கிறது. மத்திய அரசின் 'நேபட்' நிறுவனமும், தமிழக அரசின் 'டான்பேட்' நிறுவனமும் இணைந்து கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் கொப்பரை கொள்முதல் செய்கிறது. கடந்தாண்டு கொப்பரை கிலோவுக்கு 44.50 ரூபாய் விலை நிர்ணயம் செய்து, ஏப்ரல் முதல் கொள்முதல் துவங்கப்பட்டது. தமிழகத்தில் ஐந்து இடங்களில் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டது.
பொள்ளாச்சி, உடுமலை, பல்லடம் ஆகிய கொள்முதல் மையங்களில் அதிகளவில் கொப்பரை எடுக்கப்பட்டது. இதனால், கொள் முதல் செய்த கொப்பரையை இருப்பு வைக்க சேமிப்பு கிடங்கு வசதியின்றி பிரச்னை ஏற்பட்டது. பொள்ளாச்சி, உடுமலை, பல்லடம் பகுதிகளில் உள்ள சேமிப்பு கிடங்கு குடோன்கள் நிரம்பியதால் அருகிலுள்ள பழநிக்கு கொண்டு செல்லப்பட்டு அங் குள்ள குடோனில் இருப்பு வைக்கப்பட்டது. வெளிமார்க்கெட்டில் கொப்பரை விலை சரிந்து விவசாயிகள் பாதிப்பதற்குள், அரசு கொப்பரை கொள்முதலை துவங்க வேண்டும் என்று விவசாயிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். மேலும், கொப்பரைக்கான ஆதரவு விலையை உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர்.
ஆனால், அரசு தரப்பில் எவ்வித அறிவிப்பும் வெளியாகவில்லை. அதனால், விவசாயிகள் கொப்பரை இருப்பு வைக்க துவங்கியுள்ளனர். முதல் தரமான கொப்பரையை இருப்பு வைத்து இரண்டாம் ரக கொப்பரையை மட்டும் வெளிமார்க்கெட்டில் வர்த்தகம் செய்கின்றனர். இதனால் ஒட்டுமொத்த கொப்பரை வர்த்தகமும் ஸ்தம்பித்துள்ளது.
கொப்பரை உற்பத்தியாளர்கள் கூறியதாவது: அரசு கொப்பரை கொள்முதலை நிறுத்தம் செய்ததும் தனியார் எண்ணெய் நிறுவனங்கள் கொப்பரை கொள்முதல் விலை யை குறைக்க துவங்கியுள்ளனர். அதனால், அரசு கொப்பரை கொள் முதலை உடனடியாக துவங்க வேண்டும். கொப்பரை கிலோவுக்கு 55 ரூபாய் ஆதரவு விலை நிர்ணயம் செய்து

கொள்முதல் துவங்க வேண்டும். பொள் ளாச்சி தாலுகாவில் கொப்பரை அதிகம் உற்பத்தி செய்யப்படும் நெகத்தில் துணை கொள்முதல் மையம் அமைத்து அனைத்து வேலைநாட்களிலும் கொள்முதல் செய்ய வேண்டும் என்றனர். 'டான்பேட்' அதிகாரிகள் கூறியதாவது: கொப்பரை கொள்முதலுக்கான ஆதரவு விலையை அரசு உயர்த்தவில்லை. சேமிப்பு கிடங்கு குடோன்களில் இருப்பு வைக்க இடம் இல்லாததால் கொள்முதல் துவங்குவது தாமதமாகிறது. கொள்முதலை துவங்கவும் இன்னும் அரசு உத்தரவு வரவில்லை. தலைமை செயலகத்தில் இருந்து உத்தரவு வந்ததும் கொப்பரை கொள்முதல் துவங்கப்படும். வரும் ஏப்., 14ம் தேதிக்குள் முறையான உத்தரவுகள் வெளியிடப்படும் என்றனர்.

**மூலிகை பண்ணைக்கு நிதி:'தினமலர்' செய்தி எதிரொலி**

மதுரை: மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே செட்டியபட்டி மலை கணவாயில் வனத்துறையின் மூலிகைப் பண்ணைக்கு போதிய நிதி ஒதுக்கீடு இல்லாமல், பராமரிப்பின்றி உள்ளதாக 'தினமலர்' இதழ் மதுரை இணைப்பில் நேற்று செய்தி வெளியானது. இதன் எதிரொலியாக தமிழக தலைமை வனப்பாதுகாவலர் பாலநாதன் மதுரையில் நேற்று மாவட்ட வன அலுவலர் ராகேஷ் குமார் ஜகெனியா மற்றும் அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார். மூலிகை பண்ணைக்கு திட்டமில்லா பணிகளிலிருந்து 5 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்குதல், மகளிர் மற்றும் வனக்குழுக்கள் மூலம் பராமரித்தல் குறித்து விவாதித்தனர். இதை அரசுக்கு பரிந்துரைக்க முடிவு செய்துள்ளனர்.

**மின்தடையால் கோழிப்பண்ணை பாதிப்பு வெயிலுக்கு தாக்கு பிடிக்காமல் கோழிகள் இறப்பு**

நாமக்கல்: தமிழகத்தில் அறிவிக்கப்பட்ட மூன்று மணி நேர மின்தடையால், கோழிப் பண்ணை தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. கோடை வெயிலின் தாக்கத்தை தாக்குபிடிக்க இயலாமல் கோழிகள் சுருண்டு விழுந்து இறக்கின்றன. இது பண்ணையாளர் களை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

நாமக்கல் மண்டலத்துக்கு உட்பட்ட பகுதியில் 800க்கும் அதிகமான கோழிப்பண்ணைகள் உள்ளன. அதன்மூலம் நாள்தோறும் 3 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கோடைக்காலங்களில் முட்டை நுகர்வு குறையும் என்பதால், பண்ணையாளர்கள் முட்டை உற்பத்தியை குறைப்பது வழக்கம். மேலும், வெயிலின் தாக்கத்தால் கோழி இறக்காமல் இருப்பதற்காக, அதன் கூடாரங்கள் மீது பண்ணையாளர்கள் மோட்டார் மூலம் தண்ணீர் பீய்ச்சி அடிப்பர்.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள மூன்று மணி நேர மின்தடையால், கோழிகள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கூடாரங்கள் மீது தண்ணீர் பீய்ச்சி அடிக்கும் பணி பாதிக்கப் பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் மத்தியில் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மதிய வேளையில் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. அச்சமயங்களில் கோழிகளை பாதுகாக்க, அதன் கூடாரம் மீது தண்ணீர் பீய்ச்சியடிப்பது வழக்கம்.

இச்சூழலில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள மின்தடையால் மதிய நேரங்களில் தண்ணீர் பீய்ச்சி அடித்து கோழிகளுக்கு உண்டான பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்ள இயலாத சூழல் நிலவி வருகிறது.

வெயிலின் தாக்கம் தாங்க முடியாமல் கோழிகள் இறக்கவும் நேரிடுகின்றன. தீவன விலையேற்றம் உள்ளிட்ட பல்வேறு இடர்பாடுகளால் கோழிப்பண்ணை தொழில் நசிவடையும் நிலையில், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள மின்தடை, எங்களை மேலும் பாதிக்கச் செய்துள்ளது' என, கோழிப்பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர் நலச்சங்கத்தலைவர் நல்லதம்பி கூறியதாவது: தீவனப் பொருள் விலையேற்றம் காரணமாக தற்போது உள்ள முட்டை விலை கட்டுப்படியாகவில்லை. கோடைகாலத்தில் கோழிகள் தீவனத்தை குறைவாக எடுத்துக் கொள்ளும். உதாரணத்துக்கு 115 கிராம் தீவனம் எடுக்கும் கோழி, வெயில் காரணமாக 100 கிராம் அளவுக்கு மட்டுமே தீவனம் உட்கொள்ளும்.

அதனால் முட்டை உற்பத்தி பாதிப்பதுடன், முட்டையின் எடையும் குறைவாக இருக்கும். கோடை வெப்பத்தின் பாதிப்பில் இருந்து தற்காத்துக் கொள்வதற்காக, மதிய நேரத்தில் பண்ணைகளின் மீது மின்மோட்டார் மூலம் தண்ணீர் பீய்ச்சி அடிக்கப்படும். அது வெப்பத்தை ஈடுசெய்யும். தமிழக அரசு அறிவித்துள்ள மூன்று மணி நேர மின்தடையால் கோழிப்பண்ணை தொழில் கடுமையாக பாதிக்கச் செய்துள்ளது.

பெரும்பாலான பண்ணையாளர்களிடம் ஜெனரேட்டர் வசதியில்லை. மின்தடை நேரங்களில் பண்ணைகளில் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள இயலுவதில்லை. வெப்பம் தாங்காமல் பண்ணைகளில் கோழிகள் சுருண்டு விழுந்து, மடிந்து வருகின்றன. கோழிப்பண்ணை தொழிலை கருத்தில் கொண்டு மின்தடை நேரத்தை குறைக்கும்படி சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டது. எனினும், மின்வாரியத்துறையினர் கைவிரித்து விட்டனர்.

மின்தடை நேரத்தை குறைத்தால் கோழிப்பண்ணைகளுக்கு பயனாக அமையும். சரியான வேக்ஸின் (மருந்து) போடாததால், கோவையில் உள்ள பண்ணையில் கோழிகள் இருந்தன. நாமக்கல்லில் உள்ள கோழிப்பண்ணைகளில் அதுபோல் எதுவும் இல்லை. கோடைக்கும் ராணிகட் (ரத்தக் கழிச்சல்) நோய்க்கும் எந்த சம்மந்தமும் இல்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**தேயிலைத் தோட்டத்தில் ஊடு பயிராக காபி செடிகள்**

மஞ்சூர் : மஞ்சூர் சுற்றுவட்டார தேயிலைத் தோட்டத்தில், ஊடுபயிராக காபி செடிகள் பயிரிடுவது அதிகரித்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயம் பிரதானமாக மேற்கொண்டு வரும் நிலையில், மாவட்டத்தின் பல பகுதிகளில், ஊடுபயிராக காபி செடிகள் விளைவிக்கப்படுகின்றன. மஞ்சூர் சுற்றுவட்டாரப் பகுதிகளான பெங்கால் மட்டம், தேனாடு, மைனலை, கோக்கலாடா, பாக்கோரை, கீழ்குந்தா, மட்டக்கண்டி, தூனேரி, பென்ஸ்டாக், ஓணிக்கண்டி உட்பட பகுதிகளில், தேயிலைத் தோட்டங்கள் இடையே ஊடுபயிராக காபி செடிகள் பயிரிடப்பட்டுள்ளது. மஞ்சூர் அருகே, தமிழக - கேரள எல்லையை ஒட்டிய கிராமங்களான கிண்ணக்கொரை, இரியசீகை சுற்றுவட்டாரப் பகுதி விவசாயிகள் பலர், இதன் மூலம் லாபம் பெறுகின்றனர். சில நாட்களில், காபி காய்க்கத் துவங்கி விடும்; நல்ல விலை கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

**கப்பாபைகஸ் கடல் பாசி வளர்ப்பால் கடல்வாழ் உயிரினங்களுக்கு பாதிப்பு**

தூத்துக்குடி : மாற்றுத் தொழில் என்ற பெயரில் வணிக நோக்கத்திற்காக கப்பாபைகஸ் என்ற கடல்பாசியை வளர்ப்பதன் மூலம் கடல்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்பட்டு வருவதாக கடலோர மக்கள் கூட்டமைப்பினர் குற்றம் சாட்டியுள்ளனர்.இது குறித்து கடலோர மக்கள் கூட்டமைப்பு அமைப்பாளர் புஷ்பராயன் நிருபர்களிடம் கூறியதாவது;

ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த கடலோர சமூக அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் மீனவ தலைவர்களை கொண்டு கடலோர மக்கள் கூட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு மீனவ மக்களின் நலத்திற்காவும், மன்னார் வளைகுடா இயற்கை வளங்களின் பாதுகாப்பிற்காவும், மீனவர்களின் வாழ்வாதார உரிமைக்காவும் செயல்படும். 11வது ஐந்தாண்டு திட்டத்தின் மூலமாக மறைமுகமாக நடைமுறைப்படுத்த முயற்சிக்கும் மீன் பிடித் தொழில் ஒழுங்குமுறை மற்றும் மேலாண்மை மசோதாவை

கைவிட வேண்டும். கடலோர ஒழுங்காற்றுச் சட்டத்தின் விதிகளை மீறி செயல்பட்டுக் கொண்டிருக்கும் தொழில் திட்டங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். 1997ம் ஆண்டு வெளியிடப்பட்ட முராரி கமிட்டியின் பரிந்துரையை உடனே நடைமுறைப்படுத்த வேண்டும். தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் மீனவ சமுதாயத்தின் உரிமைகளை பறிக்க கூடாது.

நலவாரியத்திற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் தனி அலுவலகம், தனி அதிகாரிகள், போதுமான அளவு நிதி ஒதுக்கீடு செய்து அவைகளை சீராக இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கடலோர கிராமங்களில் 1000 மீட்டருக்கு உட்பட்டு வாழும் மீனவர்களுக்கு கலைஞர் வீட்டு வசதி திட்டத்தில் வீடுகள் கட்டித் தர வேண்டும். மன்னார் வளைகுடா பகுதியில் இருக்ககூடிய தொழிற்சாலைகளில் மாசுக்கட்டுப்பாட்டு முறைகளை கண்டிப்பாக உள்ளனவா என்று அரசு கண்காணிக்க வேண்டும். மாற்றுத் தொழில் என்ற பெயரில் வணிக நோக்கத்திற்காக கப்பாபைகஸ் என்ற கடல்பாசி வளர்த்து, அதனை வியாபாரமாக்குவதை அரசாங்கம் தடை செய்யவேண்டும். இந்த பாசி வளர்ப்பு நமது கடல்வாழ் உயிரினங்களையும், மீனவர்களின் பொருளாதாரத்தையும் அழிக்க கூடியதாகும். மீன்பிடிக்க தடை செய்யப்பட்ட காலங்களில் விசைப்படகு மீனவர்களுக்கு 45 நாட்களுக்கு மொத்தம் 4 ஆயிரத்து 500 ரூபாய் வழங்க வேண்டும் என்றார். அப்போது கடலோர மக்கள் கூட்டமைப்பு நிர்வாகிகளும், உறுப்பினர்களும் உடன் இருந்தனர்.

**மல்லிகை பூ விலை வீழ்ச்சி விவசாயிகள் விரக்தி**

தூத்துக்குடி: தூத்துக்குடியில் மல்லிகைப்பூ விலை வரலாறு காணாத வகையில் தற்போது கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். எந்த ஒரு விசேஷமும் இல்லாததால் தான் இதுவரை இல்லாத அளவிற்கு பூ விலை வீழ்ச்சியடைந்திருப்பதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

தூத்துக்குடி காய்கறி மார்கெட் பகுதியில் உள்ள மொத்த பூ மார்கெட்டிற்கு தற்போது பூக்கள் வரத்து மிக அதிகமாக உள்ளது. தினமும் 5 ஆயிரம் கிலோ பூக்கள் வருகிறது. இதனால் மல்லிகைப்பூ விலை இதுவரை எந்த ஆண்டும் இல்லாத வகையில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. கடந்த வாரத்தை விட விலை இன்னும் கணிசமாக குறைந்திருப்பதால் பூ உற்பத்தி செய்யும் விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர். இது குறித்து பூ உற்பத்தி விவசாயிகள் கூறியதாவது; நாங்கள் நீண்ட காலமாக தொடர்ந்து பூ உற்பத்தி செய்து மார்கெட்டிற்கு கொண்டு வருகிறோம். இந்த நேரத்தில் உற்பத்தியும் அதிகமாகி விலை மிக, மிக வீழ்ச்சியடைந்திருப்பது இப்போது தான் பார்க்கிறோம். மிகவும் விலை குறைந்துள்ளதால் பூவை சம்பளத்திற்கு ஆள் போட்டு பறித்து, வெளியூர்களில் இருந்து பஸ், டூவீலர் மூலம் கொண்டு வருவதற்கு ஆகும் செலவுகளுக்கு இப்போது உள்ள விலை கட்டுப்படியாகவில்லை. இவ்வாறு தெரிவித்தனர். இது குறித்து பூ மார்கெட் மொத்த வியாபாரி மாடசாமி கூறியதாவது;

தூத்துக்குடி பூ மார்கெட்டிற்கு தற்போது தினமும் 5 ஆயிரம் கிலோ பூக்கள் வருகிறது. தற்போது கொடை விழா, திருமண சீசன் எதுவும் இல்லாததால் வரத்துக்கு தக்கவாறு பூ விற்பனை ஆகவில்லை. இதனால் பூக்கள் விலை மிக, மிக குறைந்துள்ளது. இந்த அளவிற்கு மல்லிகைப்பூ விலை மிகவும் வீழ்ச்சியானது இப்போது தான். கடந்த வாரம் ஒரு கிலோ மல்லிகைப்பூ 40 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை விற்றது. தற்போது அந்த விலையும் குறைந்து ஒரு கிலோ 30 ரூபாயிற்கு விற்பனையாகிறது.இவ்வாறு அவர் தெரிவித்தார்.மொத்த மார்கெட்டில் மல்லிகைப்பூ கிலோ 30 ரூபாய் என்று மலை போல் பூவை குவித்து வைத்துக் கொண்டு கூவி, கூவி விற்பனை செய்து வருகின்றனர். இந்த பூவை வாங்கிக் கொண்டு தெருத், தெருவாக 100 கிராம் பூ 6 ரூபாய் முதல் 8 ரூபாய் வரை சில்லரை விற்பனை செய்து வருகின்றனர். விலை குறைவு என்பதால் அனைத்து தரப்பினரும் பூ வின் பக்கம் பார்வையை திருப்பியுள்ளனர்.

**விளை நிலங்களில் நெல் மற்றும் கரும்பு தவிர வேறு பயிர்கள் சாகுபடி செய்து பயன்பெறலாம் : பல்கலை., பேராசிரியர் செல்வராஜ் தகவல்**

விழுப்புரம் : விழுப்புரம் மாவட்ட விளை நிலங் களில் நெல், கரும்பு சாகுபடி தவிர விவசாயிகள் வேறு எந்த பயிர்களை சாகுபடி செய்யலாம் என தமிழ்நாடு பல்கலைக் கழகம் நடத்திய ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பருவநிலை மாற்றங்களால் விவசாய பயிர்கள் பாதிக்கப்படுவது குறித்த கலந் தாய்வு கூட்டம் நடந்தது. இதில் பங்கேற்ற தமிழ்நாடு பல்கலைக் கழக பேராசிரியர் டாக்டர் செல்வராஜ் நிருபர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் தற்போது பசுங்குடில் வாயுக்கள் (கிரீன் ஹவுஸ் காஸ்) அதிகளவில் வந்துள்ளன. இந்த வாயுக் கள் பெரிதும் தோன்ற காரணம் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுகள் தான். இந்த வாயுக்கள் தற்போது 17 சதவீதம் அதிகமாகியுள்ளதால் பூமி வெப் பமடைந்து வருகிறது. இந்தாண்டு மட்டும் 3 டிகிரி அளவு பூமி வெப்பமாக வாய்ப்புள்ளது. தொழிற்சாலை கழிவு மற்றும் நச்சுப்புகை வெளியேற்றத்தால் சுற்றுச்சூழல் மாசுபடுவதுடன், மனித இனத்திற்கும் பெரிய பாதிப்புகள் ஏற்படும் நிலையுள்ளது.
அமெரிக்கா, ஐரோப்பியா போன்ற வளர்ந்த நாடுகள் அனைத்தும் தற் போது தொழிற்சாலை கழிவுகளால் சுற்றுச்சூழல் மாசுபடுவது பற்றி எச்சரித்து வருகின்றன. இவர்களால் வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள தொழிற்சாலைகளுக்கு நிறைய கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் நெல் மற்றும் கரும்பு சாகுபடியை தவிர்த்து மாற்று பயிர்களை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை. விருத்தாச்சலம், திண்டிவனத்தில் உள்ள எங்கள் ஆய்வு கூடத்தில் விழுப்புரத்தில் உள்ள மண் வளத்தை ஆய்வு செய்து வேறு எந்தெந்த பயிர்களை விளைவிக்கலாம் என ஆராய்ச்சி செய்துள்ளனர்.
இந்தியாவில் கடந்த காலங்களில் உணவு பற்றாக்குறை இருந்ததால் விவசாயிகள் நிலங்களில் செயற்கை முறையிலான யூரியா உரங்களை தெளித் தனர். தற்போது நமது நாட்டில் உணவு பற்றாக்குறை இல்லை. இதனால் விளை நிலங்களில் உள்ள மண் வளத்தை காக்க பயிர்களுக்கு மாட்டு சாணம், மண்புழுக்கள் போன்ற இயற்கை சார்ந்த உரங்களை பயன்படுத்த வேண்டும். பசுங்குடில் வாயுக் களை தடுப்பதற்கு ஆராய்ச்சி அணுகுமுறைகளால் மட்டும் முடியாது. அந்த மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் ஒத்துழைப்பும் அவசியம் என்றார்.

**கனகாம்பரம் பூ விளைச்சல் அமோகம்**

விழுப்புரம் : விழுப்புரம் அடுத்த சிந்தாமணி கிராமத்தில் கனகாம்பரம் பூ பயிரிட்டு செழிப்பாக வளர்ந் துள்ளது.
விழுப்புரம் அடுத்த சிந்தாமணி கிராமத்தில் கலியமூர்த்தி என்பவர் தனக்கு சொந்தமான 25 சென்ட் நிலத்தில் கனகாம்பரம் பயிரிட்டுள்ளார். மற்ற இடங்களில் இருப்பதைவிட இந்த பகுதியில் பூக்கள் செழிப்பாக அடர்ந்த நிறத்தில் விளைச்சல் இருந்தன. களி மண் பூமியில் செம்மண் கலந்து பயிரிட்ட தால் நல்ல விளைச்சல் இருக்கிறது. இயற்கை உரம், டி.ஏ.பி.,கலந்து தெளிக்கின்றனர். விசேஷ நாட்களில் கிலோ 200 ரூபாய்க்கும், சாதாரண நாட்களில் 120 முதல் 150 ரூபாய்க்கும் பூக்கள் விற்கிறது.

**கூடுதல் விலைக்கு உரம் விற்றால் நடவடிக்கை**

விருதுநகர் : விருதுநகர் வேளாண் இணைஇயக்குனர் பாண்டியராசு செய்திக் குறிப்பு: மாவட்டத்தில் யூரியா 2,034 மெ.டன், டி.ஏ.பி., 1,760, பொட்டாஷ் 1,515, காம்ப்ளக்ஸ் 1,096 மெ.டன் இருப்பு உள்ளது. மார்ச் முடிய சப்ளை செய்யப் பட்ட உரங்களை அரசு நிர்ணயம் செய்த விலைக்கே விற்க வேண் டும்.
ஏப்., 1 முதல் சத்துக்களின் அடிப்படையில் மானியம் வழங்கும் திட்டத்தில் தொடர்ந்து யூரியாவுக்கு மட்டும். மத்திய அரசு அதிகபட்ச சில்லரை விற்பனை விலையை நிர்ணயம் செய்யும். கூடுதல் விலைக்கு உரங்களை விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

# குன்னூர் பகுதியில் கடும் வெயில்: தேயிலை செடிகள் கருகின

*குன்னூர், ஏப்.8–*

*குன்னூர் பகுதியில் வெயிலின் காரணமாக தேயிலை செடிகள் கருகி காணப்படுகின்றன.*

*பலத்த மழை*

*கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நீலகிரி மாவட்டத்தில் பலத்த மழை பெய்தது. இதனால் மாவட்டத்தில் பல் வேறு சேதங்கள் ஏற்பட்டன. குன்னூர் தாலுகாவில் தான் அதிகளவு மழை பெய்தது.*

*நவம்பர் மாதத்திற்கு பின்னர் டிசம்பர், ஜனவரி மாதத்திலும் மழை தொடர்ந்து பெய்தது. இதனால் குன்னூர் பகுதியில் உறைபனியின் தாக்கம் குறை வடைந்து இருந்தது. இருப் பினும் ஒரு சில நாட்களில் பெய்த கடும் உறைபனியின் காரணமாக விவசாய பயிர்கள் கருகின.*

*கடந்த பிப்ரவரி மாதம் 24–ந் தேதி குன்னூரில் அரை மணி நேரம் மழை பெய்தது. அதன் பின்னர் மழை இல்லாமல் இருந்ததால் வெயிலின் காரணமாக கடுமையான வறட்சி நிலவி வந்தது.*

*கருகின*

*வெயிலின் காரணமாக நீர்ப்பாசன வசதியற்ற விவசாய நிலங்களில் பயிரிடப் பட்டு இருந்த விவசாய பயிர்கள் கருகின. பிப்ரவரி மாதம் பெய்த மழைக்கு பின்னர் ஒரு சில நாட்களில் அதிகாலை நேரத்தில் வறட்சி யான காற்று வீசியது.*

*இதனால் நிலத்தில் இருந்த ஈரம் காற்றினாலும், வெயிலி னாலும் ஈர்க்கப்பட்டது. தேயிலை தோட்டங்களில் ஈரம் இல்லாத பகுதிகளில் தேயிலை செடிகள் கடும் வெயிலினால் கருகி உள் ளது.*

*பணிகள் நிறுத்தம்*

*கடந்த வாரத்தில் ஊட்டி யில் 3 நாட்கள் மழை பெய்தது. ஆனால் குன்னூர் பகுதியில் வெள்ளிக்கிழமை ஒரு நாள் மட்டும் சிறிது நேரம் மழை பெய்தது. இந்த மழை வறட்சியான நிலத்திற்கு போதுமானதாக இல்லை. குறைந்த மழை பூமியில் இருந்த வெப்பத்தை தூண்டிய தால், விவசாய பயிர்கள் அதிகளவு காய்ந்து விட்டன. பகல் வேளையில் கடும் வெயிலினால் தேயிலை செடிகளின் மகசூல் வெகுவாக குறைந்துள் ளது.*

*ஒரு சில தோட்டங்களில் பச்சை தேயிலை வளர்ச்சி இல்லாமல் செடிகள் காய்ந்து உள்ளன. சிறு தேயிலை தோட்டங்களில் இலை பறிப்பு போன்ற பணிகள் நிறுத்தப் பட்டு உள்ளது.*

*தற்போது தேயிலை விலை வீழ்ச்சி காரணமாக பச்சை தேயிலையின் விலையும், வாரா, வாரம் குறைந்து வரு கிறது. வறட்சியினால் தேயிலை மகசூல் பாதிப்பு, விலை வீழ்ச்சி போன்றவற்றால் சிறு தேயிலை விவசாயிகள் கடுமையாக*

பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இதனால் சிறு தேயிலை விவசாயிகளின் வாழ்க்கை தரம்கேள்விக்குறியாக உள்ளது என்று சிறு விவசாயிகள் கூறினர்.

# நீலகிரியில், பலாப்பழம் விளைச்சல் தொடக்கம்

## காட்டு யானைகள் 'குஷி'

கூடலூர்,ஏப்.8–

நீலகிரி மாவட்டத்தில் பலாப்பழம், அத்திப் பழங்கள் விளைச்சல் தொடங்கி உள்ளதால் வனப்பகுதியில் வசிக்கும் காட்டு யானைகள் குஷி அடைந்துள்ளன.

### பலாப்பழ விளைச்சல் தொடக்கம்

நீலகிரி மாவட்டம் வனப் பகுதிகளை உள்ளடக்கிய பகுதியாகும். கூடலூர், குன் னூர், கோத்தகிரி பகுதிகளில் அதிகளவு வனப்பகுதிகள் உள்ளன. இங்கு அரிய வகை மூலிகை செடிகள், ஓட்டுண்ணி தாவரங்கள், சந்தனம், ரோஸ் வுட், தேக்கு, ஓமம் உள்ளிட்ட விலையுயர்ந்த மரங்களும், மா, பலா, அத்திப்பழம் உள் ளிட்ட பழ வகை மரங்களும் அதிகளவு உள்ளன.

ஒவ்வொரு காலகட்டத் திலும் பழவகை மரங்கள் காய்க்கின்றன. தற்போது நீலகிரியில் அத்திப்பழங்கள், பலாப்பழங்கள் விளைச்சல் தொடங்கிஉள்ளது. வனப் பகுதியில் உள்ள அத்திப்பழ மரங்கள் காய்த்து குலுங்கு கின்றன. இதனால் அணில் இனங்கள், குரங்குகள், பறவைகள் அதிகளவு அத்திப் பழங்களை உண்டு பசியாறு வதை காணமுடிகிறது. அத்திப் பழங்கள் ரத்த விருத்திக்கு ஏற்ற மருந்தாகும்எனசித்தமருத்துவம் கூறுகிறது.

### வனவிலங்குகள் குஷி

மேலும்நீலகிரிவனப்பகுதியில் உள்ள பலா மரங்கள் கொத்து கொத்தாக காய்த்துள்ளது. பலாப்பழங்களை விரும்பி சாப்பிடும் காட்டு யானைகள் மத்தியில் குஷி ஏற்பட்டுள்ளது. பலாப்பழ விளைச்சல் தொடங்கி உள்ளதால் இனி வரும் காலங்களில் காட்டு யானைகளுக்கு ஏற்பட்டுள்ள உணவு தட்டுப்பாடு சற்று குறையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

கோடை சீசன் தொடங்கி உள்ள நிலையில் சமவெளி பகுதியில் இருந்து வரும் சுற்றுலா பயணிகளும் இனி பலா காய்களை பார்த்து ரசித்து விட்டு செல்வதை காண முடியும்.



கூடலூரில், மண்தரையில் தவழ்ந்தபடி பலாக்காய்கள் கொத்து கொத்தாக காய்த்துள்ள காட்சி.

வேளாண்மை செய்திகள்

# ஆயுர்வேதத்துக்கு மருந்தாக பயன்படும் செண்டுமல்லி



செண்டு மல்லி மருத்துவ பயிராக தமிழகத்தில் பயிரிடப்படுகிறது. 'மேரி கோல்டு' என்று ஆங்கிலத்தில் அழைக்கும் இந்த செண்டுமல்லி மஞ்சள் மற்றும் இளம் சிவப்பு நிறங்களில் பூத்து குலுங்கும் தன்மை கொண்டது. குறிப்பாக இறை வழிபாட்டுக்கும் பூ மாலை கட்டுவதற்கும் செண்டுமல்லி பயன்படுகிறது. இதன் இலை மற்றும் பூக்களில் மெல்லிய நறுமணம் நிறைந்திருக்கும். தோட்டங்களுக்கு அழகு சேர்க்கும் இந்த செண்டுமல்லி கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை பகுதியில் அதிகம் பயிரிடப்படுகிறது. இதே போல் திண்டுக்கல், தேனி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களிலும் அதிக அளவில் பயிர்செய்யப்படுகிறது.

### மண்

இந்த செடியை வளர்ப்பதற்கு செம்மண் மற்றும் சரளை மண் ஏற்றது. இந்த மண்ணின் அமிலத் தன்மை 6 சதவீதம் முதல் 7.5 சதவீதம் மட்டுமே இருக்க வேண்டும். மேலும் சிறந்த வடிகால் வசதி தேவை. பொதுவாக செண்டுமல்லியை ஆண்டின் இரண்டு பருவங்களில் பயிரிடலாம். ஜூன் அல்லது ஜூலை, செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்கள் ஏற்ற மாதங்கள் ஆகும். தமிழ்நாட்டை பொறுத்தவரை செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதம் நாற்றுகளை நடவு செய்ய ஏற்ற பருவமாகும். பூக்கள் பூக்கும் காலத்தில் அதிக சூரிய ஒளியும் மிதமான தட்பவெப்பமும் இருப்பது அவசியம். பூக்கும் பருவத்தில் தொடர்ச்சியான மழை மகசூலை பாதிக்கும்.

### விதை அளவு

ஒரு ஏக்கருக்கு 250 கிராம் விதைகள் போதுமானது. நல்ல முளைப்பு திறன் உள்ள புதிய விதைகளை வாங்கி பயன்படுத்துவது நல்லது.

ஒரு ஏக்கரில் நடவு செய்ய சுமார் 200 சதுர அடி அளவில் நாற்றாங்கால் அமைக்க வேண்டும். இதற்காக 10 அடி நீளம் மற்றும் 2 அடி அகலம் உள்ள மேட்டுப்பாத்திகளை அமைக்க வேண்டும். நன்கு மக்கிய இயற்கை உரத்தை ஏக்கருக்கு 200 கிலோ என்ற அளவில் கடைசி உழவின் போது இட வேண்டும்.

பாட்டிங் சாயில் என்ற இயற்கை உரத்தை பாத்திகளில் கலந்து இடுவதன் மூலம் விதைகளின் முளைப்பு திறன் அதிகரித்து நாற்றுகள் திடமாக இருக்க வாய்ப்பு உள்ளது. பூவாளியை கொண்டு நாற்றாங்காலில் நீர் தெளிக்க வேண்டும். செண்டுமல்லி பூவின் விதைகள் மிகவும் லேசானது. எனவே நாற்றாங்காலின் குறுக்காக நேர்கோடுகளை அமைத்து விதைகளை சன்னமாக விதைக்க வேண்டும். அதன்பின்னர் மணல் மற்றும் பொடி செய்யப்பட்ட தொழு எருவை கொண்டு விதைகளை மூட வேண்டும். 20 முதல் 25 நாட்கள் வயது உடைய நாற்றுக்களை நடவுக்கு பயன்படுத்தலாம். அதிக வெப்பம் உள்ள பகுதிகளில் நிழல் பந்தல் அமைப்பது நல்லது.

ஒவ்வொரு நாற்றுக்கும் இடையே 60-க்கு 45 சென்டிமீட்டர் இடைவெளி தேவை. ஒரு குத்துக்கு 2 நாற்றுக்கள் நட வேண்டும். ஏக்கருக்கு 4 டன் தொழு உரம், 25 கிலோ தழைச்சத்து, 40 கிலோ மணிச் சத்து, 50 கிலோ சாம்பல் சத்து உள்ள உரங்களை அடி உரமாக இட வேண்டும். மேலும் நுண்ணுயிர் உரங்களை ஏக்கருக்கு 3 கிலோ என்ற அளவில் உபயோகிப்பது நல்லது.

### பூச்சி கட்டுப்பாடு-மகசூல்

செண்டுமல்லி செடியை தாக்கும் இலைப்பேன் புழுக்களை கட்டுப்படுத்த வேப்ப எண்ணெய் தெளிப்பது நல்லது. இதன் தாக்கம் அதிகம் இருப்பின் வெட்டபிள் சல்பர் அல்லது டைமெத்தோயேட் போன்ற மருந்துகளை தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம். நாற்று நட்ட 45-வது நாளில் இருந்து 120 நாட்கள் வரை செண்டுமல்லி பூக்களை பறிக்கலாம். ஏக்கருக்கு 8 டன் முதல் 10 டன் வரை கிடைக்கும் செண்டுமல்லி பூக்களை பறித்தவுடன் உடனடியாகவோ அல்லது காயவைத்தோ விற்பனை செய்யலாம். வியாபார சந்தையின் விலைக்கு ஏற்றவாறு ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் முதல் ரூ.50 ஆயிரம் வரை லாபம் கிடைக்கும்.

### மருத்துவ பயன்கள்

செண்டுமல்லி செடியில் இருந்து பெறப்படும் 'சேந்தோட்டில்' என்ற சாயம் உணவு வகைகளுக்கு நிறம் ஊட்டும் பொருளாக பயன்படுகிறது. இதே போல் இந்த பூவில் இருந்து பெறப்படும் எண்ணெய் வாசனை திரவியங்கள் தயாரிக்க பயன்படுகிறது. மேலும் இந்த பூவில் இருந்து பெறப்படும் சாறு ஆயுர்வேத மருத்துவத்தில் கண் கோளாறு, அல்சர் போன்ற நோய்களுக்கு வலி நிவாரணியாக பயன்படுகிறது.

தகவல்:- ஏ.கபீர், வேளாண் ஆலோசகர்,
வேளாண் நிலையம், தாராபுரம்.

# விதையில்லா தாவர இனப்பெருக்க முறைகள்

தாவரங்களை விதைவழி இனப்பெருக்கம் செய்வதுதான் எளிமையான முறையாகவும், குறைந்த நாளே செலவாகும் முறையாகவும் கருதப்படுகிறது. ஆனால் இந்த முறையில் நாற்றுகளின் சீரற்ற வளர்ச்சி, மகசூல் வேறு, நோய் எதிர்ப்பு தன்மையில் வேறுபாடு ஆகிய குறைபாடுகள் உள்ளன. எனவே விதை வழியாக இல்லாமல் தாவரத்தின் பகுதிகளில் இருந்து இனப்பெருக்கம் செய்யும் நடைமுறைகள் தாவர உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது.

### இனப்பெருக்க முறைகள்

தாவரத்தின் இலை, தண்டு, நுனி, வேர் ஆகிய எந்த ஒரு துண்டு பகுதியின் மூலமாக இனப்பெருக்கம் செய்யும் முறை துண்டுவழி இனப்பெருக்க முறையாகும். பொதுவாக தாவரத்தின் இளநிலையையில் உள்ள பகுதிகளே இந்த முறைக்கு பயன்படுத்தப்படும். மரப்பட்டைகளை லேசாக உரித்து, கிளைகளை கவாத்து செய்து தாவர துண்டுகளை சேகரிக்கலாம்.

இவற்றின் இலைப்பகுதிகளை நறுக்கி, ஈரத் துணியில் போர்த்தி நிழலில் வைக்க வேண்டும். இந்த துண்டுகளை தகுந்த வேர் வளர்ச்சியூக்கிகளில் நனைத்து, பூஞ்சாண கொல்லிகளை பயன்படுத்தினால் வேரின் வளர்ச்சியை அதிகரிக்கலாம். செடியின் முழு பகுதியையும் வளைத்து வண்டல் மண் அல்லது மக்கிய நார் கொண்டு லேசாக மூடி வைத்து புதியதாக தளிர்விட வைக்க வேண்டும். தளிர் விட்டு வேர்கள் வளர்ந்த பின் தனித்தனியாக பிரிக்க வேண்டும்.

### வளர்ச்சியூக்கிகள்

முதிர்ந்த மரத்தின் இளங்கிளைகளை இம்முறையில் எளிதாக பதியனிடலாம். கிளைப்பகுதியின் பட்டைகளை லேசாக நீக்கி, வளர்ச்சியூக்கிகளை வேர் வளரும் இடங்களில் ஏதாவது ஒன்றை கொண்டு மூடி, மெல்லிய பாலித்தீன் தாள்களை கொண்டு இறுக்கி கட்டி வைக்க வேண்டும். 2 அல்லது 3 மாதங்களில் வேர் சிறப்பான வளர்ச்சியை பெறும்.

ஒட்டு வளர்ப்பு முறையில் 2 அல்லது அதற்கு மேற்பட்ட தாவரப்பகுதிகளில் இன்றாக இணைக்கப்பட்டு, ஒரு செடியின் அடிப்பகுதி இன்னொரு செடியின் மேற்பகுதியுடன் ஒட்டப்படுகிறது. இதில் தாவரங்களின் தன்மைக்கு ஏற்ப இணை வைத்திறன் ஒன்றாக இருந்தால், இரண்டு தாவரங்களையும் பொருத்தமாக செதுக்கி விட்டு சேர்த்து கட்டி வளர செய்யலாம்.

### பயன்பெறலாம்

இதேபோல் ஒட்டு வளர்ப்பு முறை, இணைவு ஒட்டு முறை, பிரித்தொட்டு முறை, மோதிர தளிர் ஒட்டுமுறை ஆகிய முறைகளையும் பின்பற்றலாம். இவ்வகை விதையில்லா முறைகளை பின்பற்றி தாவரங்களை அதிக அளவில் இனப்பெருக்கம் செய்து பயன்பெறலாம்.

-தகவல்: வனமரபியல் மற்றும் மரப்பெருக்க நிறுவனம், கோவை.

# வேளாண்மை கேள்வி– பதில்

கேள்வி: நான் மூலிகை செடிகளை பயிரிட ஆர்வமாக இருக்கிறேன். எனக்கு போதிய திட்ட அறிக்கை, கடன் உதவி, சாகுபடி நுட்பங்கள், விற்பனை வாய்ப்பு பற்றி எங்கு தெரிந்து கொள்ளலாம்.

பி.மாரியப்பன், நீலகிரி.

பதில்: தமிழ்நாடு மூலிகை வளர்ச்சி வாரியம் இதற்கான உதவிகளை செய்கிறது. பல்வேறு மூலிகைகள் பற்றிய திட்ட அறிக்கை, சாகுபடி மற்றும் பல்வேறு வகைகளில் உதவி செய்கிறார்கள். சென்னை அரும்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு மருத்துவ மூலிகைகள் வாரியத்தை தொடர்பு கொள்ளலாம். டாம்ப்கால் (தமிழ்நாடு மருத்துவ தாவரங்கள் மற்றும் மூலிகை மருந்துகள் வாரியம்), அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை–16 என்ற முகவரிக்கு கடிதம் மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.

கேள்வி: நான் ஸ்பைருலினா பாசி வளர்ப்பு பற்றி தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இது தொடர்பாக எங்கு பயிற்சி பெறலாம்?

குமார், ஆரூர்.

பதில்: எதிர்காலத்தில் பலருக்கும் மிகச்சிறந்த வேலைவாய்ப்பை அளிக்க போகிறது இந்த ஸ்பைருலினா பாசி வளர்ப்பு தொழில். எந்த உணவும் இல்லாமல் ஸ்பைருலினா பாசியை மட்டுமே உணவாக கொண்டு மனிதன் வாழ முடியும் என்கிறார்கள். விண்வெளி வீரர்கள் உணவாக இந்த பாசியை தான் கொண்டு செல்கிறார்கள். 25 சென்ட் இடமும், தண்ணீர் வசதியும் இருந்தால் பாசி உற்பத்தியை தொடங்கி விடலாம். இதற்கு மிகச்சிறந்த ஏற்றுமதி வாய்ப்பும், உள்நாட்டில் நல்ல விற்பனை வாய்ப்பும் இருக்கிறது. இது பற்றி தெரிந்து கொள்ள ராஜமாணிக்கம் சிங்கம் 9884000413 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள்.

**விவசாயிகளே உங்கள் சந்தேகங்கள், கேள்விகளை கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.**

**ஆசிரியர்,**
**வேளாண்மை செய்தி பிரிவு,**
**தினத்தந்தி, கோவை–18.**

